முருகப்பெருமான் துணை

**மகான் வியாக்ரமர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.04.2024**, சனிக்கிழமை

1. அவதார ஞான குருவே
அரங்கமகா ஞான தேசிகனே
அவனியில் அரங்கன் தருமபலம்
ஆற்றல் கூறி துல்லிய ஆசிதனை
2. ஆசிதனை குரோதி தகர் திங்கள்
அச்சமற சப்தம திகதி காரி வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 07 ம் நாள், 20.04.2024, சனிக்கிழமை)
ஆசிதனை வியாக்ரமர் யானும்
அருளுவேன் உலக நலம் பெற
3. நலம்பெற வேண்டி அரங்க ஞானி
ஞானமாகத் தரும் உபதேசங்களை
பலம்பெற மக்கள் ஏற்று
பணிந்து தொடர்ந்து வர
4. வருகவே மக்களிடை ஞானிகள்
வலம் வந்து சூட்சும பலம்
பெருமைபட தந்து இனிதே
பூவுலகில் ஞானவான்களாகத் தேற்றி
5. தேற்றி உலகையே காப்பர்
தெய்வ பலமாக அரங்கன் தரும்
ஆற்றல் மிக்க தீட்சை தன்னை
அகிலத்தார் அடைதல் மூலம்
6. மூலமதில் மும்மலக் குற்றமுடன்
முன்சாப வினைகளும் விலகி
காலத்தை காலனை வெல்லும்
கண்டுரைப்பேன் சக்தி கூடி
7. கூடியே ஞானிகளாக வாழ்வர்
குவலயம் மேல்நிலை அடைய
தேடியே உயர் சேவை ஆற்றி
தெய்வங்களே இறங்கி அருளும்

8. அருளும் வண்ணம் உலகினில்
அறமும் சமூகமாற்றமும் தந்து
வரமென வழிவகை செய்வர்
வல்லமையான அரங்க ஞானி

9. ஞானியரின் சன்மார்க்க நெறி
நடைமுறையில் நம்பகமுற
இனி உலகமெங்கும் நிலைக்க
இயம்பிடுவேன் கலிகாலத் துன்பங்கள்

10. துன்பங்கள் அனைத்தும் விலகி
தேசமெங்கிலும் வளம் கூடிட
இன்பமான செயல்கள் பெருகி
இயற்கையின் ஆசிபலமும் கூடி

11. கூடியே ஞானிகளே ஆள
குறைவிலா மாற்றம் ஆகவே
நாடிவரும் ஞான ஆட்சி காலம்
நாட்டிவந்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–